175

பார்த்திவஸ்ரீ
ஆனி - ஆடி மீ

ஸ்ரீ:

ஸம்புடம் - 4
ஸஞ்சிகை - 7

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

"அஹோபிலே காருடசைலமத்யே க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம் லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ||"

பக்கம்
விஷய ஸூசிகை :—1. நமது ஸித்தாந்தத்தில் சில ஸந்தேஹங்கள் 67
2. ஸ்ரீ பெரியாழ்வார் ராமாயணம் 71
3. ஸ்ரீ கீதாம்ருத வர்ஷிணீ 74
4. செய்திகள் 77
5. ஸம்பாதகரின் குறிப்புக்கள் 81

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

நமது ஸித்தாந்தத்தில் சில ஸந்தேஹங்கள்

[அதீந்த்ரிய விஷயங்களில் நமது ஸித்தாந்தம், ஶ்ருதி ஸ்ம்ருதிகளையே ப்ரமாணமாக அவலம்பித்திருக்கின்றது. ஶ்ருதிகளுக்குள் பரஸ்பரம் முரண்பாடுகள் சிற்சில விடங்களில் தென்படுகின்றன. ஶ்ருதிகளை உபப்ரும்ஹணம் செய்யும் இதிஹாஸ புராணாதிகளிலும் சிற்சில விஷயங்கள் அநுபபந்நங்கள் போலத் தோன்றுகின்றன. இந்த முரண்பாடுகளை ஸமீகரணம் செய்வதிலும், அ[illegible] போலத் தோன்றுகிற விஷயங்களுக்கு உபபத்தி சொல்லி[illegible] நமது ஆசார்யர்கள் மஹத்தான ஶ்ரமப்பட்டு தம்தமக்கு [illegible]ற்றும் ஸித்தாந்தங்களைச் செய்திருக்கிறார்கள். அதி கம்[illegible]த்தாந்தங்களை உள்ளபடி அறிவதற்கு அஶக்தர்களான [illegible] நிர்ணயங்கள் சிற்சில விடங்களில் நன்றாக விளங்காமலே [illegible]வைகளுட் சிலவற்றை நாம் இவ்விடத்தில் விஜ்ஞாபித்துக் [illegible] ஶாஸ்த்ரஜ்ஞர்கள் அதை அந்யதாவாக க்ரஹியாமல் [illegible]ணயங்களை மாத்ரம் ஸங்க்ரஹமாக நியமிக்க ப்ரார்த்திக்கிறோம்]

JL
Q22ж211, N41
N45.4.7.
210139

(1)

'பகவான் கல்யாண குணங்களால் நிறைந்தவன்; ஹேயகுணங்களற்றவன்' என்று ஶாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. 'ஹேயகுணங்கள் அவனிடம் இல்லை' யென்பதற்கு, அசேதநங்கள் சேதநர்கள் இவர்களுடைய ஸ்வரூபத்திலும் ஸ்வபாவத்திலும் என்ன என்ன தோஷங்கள் உண்டோ, அவை ஒன்றும் ப்ரஹ்மத்தின் ஸ்வரூபஸ்வபாவங்களில் இல்லை என்பது பொருள். ["**हेयप्रत्यनीकत्वञ्च चिदचिदात्मकप्रपञ्चधर्मभूता ये दोषाः तद्विपरीतरूपम्**"] அப்படிப்பட்ட ப்ரஹ்மத்திற்குப் பிறரை மோஹிப்பிக்கும் [அதாவது: வஞ்சிப்பிக்கும்] ஸ்வபாவம் உண்டு என்று நமது ஸித்தாந்தம் சொல்லுகின்றது. அது உபபந்நமா என்பது முதல் ஸந்தேஹம். ஸ்ரீ தேஶிகன் அதிகரண ஸாராவளியில்

"**स्वानिष्टप्रत्यनीकप्रमथनमनसा मोहनादिप्रवृत्तेः**"

[தனக்கு அநிஷ்டராயிருக்கும் ராஜஸ தாமஸ ப்ரக்ருதிகளை நாசம் செய்யவேண்டும் என்னும் எண்ணத்துடன் அவர்களை மோஹிப்பிக்கும் கார்யத்தில் ஈஶ்வரன் ப்ரவர்த்திக்கிறான் என்பது ப்ரமாண ஸித்தம்] என்று அநுக்ரஹித்திருக்கிறார்.

"**एष एव असाधु कर्म कारयति तं, यमधो निनीषति**"

[எவனைக் கீழே தள்ளவேண்டுமென்று ஈஶ்வரன் ஸங்கல்பிக்கிறானோ, அவனை அவனே கெட்ட கார்யத்தைச் செய்விக்கிறான்] என்று ஶ்ருதி வாக்யமும் சொல்லுகின்றது. ஆனால் ஸ்ரீ பாஷ்யகாரர் இதை கேவலம் ப்ரதிகூலராக இருக்குமவர்கள் விஷயத்தில் மாத்ரம் ஸங்கோசித்திருக்கிறார். இருந்தபோதிலும், 'ஈஶ்வரன் காருணிகனன்றோ? அவன் பிறரை மோஹிப்பிப்பனோ?' என்னும் ஶங்கை ஜநிக்கின்றது. அதற்கு

"**कारुण्याद्विप्रलिप्सा न यदि वृजिनजं नेशनिघ्नं फलं स्यात्**"

[ஈஶ்வரன் பரம காருணிகனாகிறபடியால் அவனிடம் விப்ரலிப்ஸை [அதாவது: மோஹநேச்சை] இருக்கமாட்டாது என்று சொல்லும் பக்ஷத்தில், ஈஶ்வரனைக் காட்டிலும் வேறு யாரால் அந்த மோஹம் உண்டாக்கப்படக்கூடும்? பாப ஜந்யமான பலத்தைக் கொடுக்கிறவன் வேறு யார்?] என்னும் ஸமாதாநத்தை ஸ்ரீ தேசிகன் அநுக்ரஹித்திருக்கிறார்.

இது அநுபபந்நம்போல்த் தோன்றுகிறதே. ஏனென்றால்: விப்ரலிப்ஸை என்பது ஸம்ஸாரி சேதநனுக்கு ஸம்பவிக்கும் ஒரு தோஷம். '**स्पर्धाविप्लवविप्रलम्भपदवीवैदेशिका देशिकाः**' [பராபிபவ இச்சை, தவறுதல், வஞ்சநை இவைகளுக்கு அத்யந்தம் தூரத்தில் இருப்பவர்கள் நமது ஆசார்யர்கள்] என்று நமது ஆசார்யர்களைப் புகழுமிடத்தில் விப்ரலிப்ஸையை [வஞ்சநையை]ப் பெரியதொரு தோஷமாக வன்றோ பெரியோர்கள் பேசியிருக்கிறார்கள்? ஹேயப்ரத்யநீகத்வம் என்பது இம்மாதிரியான தோஷங்களுக்கு விபரீதமாயிருக்கும் தன்மையானால், ஹேயப்ரத்யநீகனாகிற ஸ்ரீ ஶரண்யனிடத்தில் இந்த வஞ்சநை உண்டென்று எப்படிச் சொல்லக்கூடும்? ஸ்ரீ தேஶிகனும் மோஹநேச்சையைத் தோஷமன்று என்று திருவுள்ளம் பற்றவில்லை என்றே தெரிகின்றது. "**दुर्वारा मोहनेच्छा**" । [மோஹநேச்சை தோஷமே; ஆனால் அது ப்ரமாண ஸித்தமாக இருப்பதால் அதை இல்லையென்று எப்படிச் சொல்லக்கூடும்?] என்றே அநுக்ரஹித்திருக்கிறார். இப்படி இந்த வஞ்சநையானது தோஷமென்பது நிஶ்சிதமானால், அந்தத் தோஷத்துடன் ஸம்பந்தப்பட்டவனை ஹேயப்ரத்யநீகனென்று நாம் எப்படி அநுஸந்தாநம் செய்யக்கூடும்? ப்ரஹ்மத்தை த்யாகிக்கும் ப்ரகாரம் பின்வருமாறு விளக்கப்பட்டிருக்கின்றது. கேவலம் ஸத்யம் ஜ்ஞாநம் ஆநந்தம் முதலான தர்மங்கள் ப்ரஹ்மத்தின் அஸாதாரண ஆகாரத்தை உபஸ்தாபநம் செய்யமாட்டாவாகையால்,

[library stamp]

ஹேயப்ரத்யநீகங்களான ஜ்ஞாநாதிகளுடன் கூடினவனைக் ப்ரஹ்மத்தை அநுஸந்தாநம் செய்யவேண்டு மென்றும் அப்பொழுதுதான் அது அஸாதாரண ஆகாரத்துடன் அநுஸந்தாநம் செய்யப்பட்டதாகு மென்றும் ஶாஸ்த்ரம் சொல்லுகின்றது. வஞ்சனை என்னும் தோஷம் துர்வாரமானால், அந்தத் தோஷம் ஒன்று நீங்கலாக மற்றை அம்ஶங்களில் பகவான் ஹேயப்ரத்யநீகன் என்று அநுஸந்தாநம் செய்யவன்றோ ப்ரஸங்கிக்கும்? அது அநிஷ்டமன்றோ? நிற்க: தனக்கு அநிஷ்டரான ராஜஸ தாமஸ ப்ரக்ருதிகளை ஶிக்ஷிக்கவேண்டுமானால், அவர்களை வஞ்சித்து மோசம் செய்யாமல் ராவணாதிகளை ஶிக்ஷித்ததுபோல் ருஜு மார்க்கத்தால் ஶிக்ஷித்தால் என்ன நஷ்டம் ஸம்பவிக்கும்? வஞ்சித்தே ஶிக்ஷிக்க வேண்டுமென்று நிர்ப்பந்தம் ஏதாவது உண்டோ? "**अशेषनिर्मलानन्तकल्याणनिधिः**" என்று அத்யந்தம் ஶுத்தனான நமது நாதனிடத்தில் வஞ்சனையை ஏற்ற மனஸ் கூசுகின்றதே.

* * * *

(2)

இரண்டாவது ஸந்தேஹம். ப்ரஹ்ம வித்துக்கள் முக்தியை அடையும் காலத்தில் ஸகல புண்ய பாபங்களையும் அப்பொழுதே நிஶ்ஶேஷமாக உதறிவிட்டு அவர்கள் முக்தியை அடைகிறார்கள் என்று உபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. சாந்தோக்யத்தில்

21039

**"अश्व इव रोमाणि विधूय पापं चन्द्र इव राहोर्मुखात्प्रमुच्य ।
धूत्वा शरीरमकृतं कृतात्मा ब्रह्मलोकमभिसंभवानि ॥"** [छान्दोग्ये 8-13-1.]

[குதிரை மயிரை உதிர்ப்பதுபோல், ப்ரஹ்மவித் தனது புண்ய பாபங்களை உதிர்த்துவிடுகிறான். ராஹுவினிடமிருந்து விடப்பட்ட சந்த்ரன்போல ஶரீரத்திலிருந்து விடப்பட்டவனாகக் கொண்டு, க்ருதார்த்தமான ஆத்மாவையுடைய ப்ரஹ்மவித் நித்யமான பகவல்லோகத்தை அடைகிறான்] என்னும் வாக்யம் இருக்கின்றது. இதிலிருந்து ப்ரஹ்ம வித்தானவன் எப்பொழுது தனது தேஹத்தை த்யஜித்து வெளிப் புறப்படுகிறானோ, அப்பொழுதே அவனுடைய புண்ய பாபங்கள் அவனை விட்டு நழுவுகின்றன என்று தெரிகின்றது. கௌஷீதகீ உபநிஷத்திலோ வென்றால்,

**"स एतं देवयानं पन्थानमापद्य ...आगच्छति विरजाम्, मनसाऽत्येति,
तत्सुकृतदुष्कृते धूनुते"**

[தேஹத்தைவிட்டு வெளியில் புறப்பட்டுப் போகும் ப்ரஹ்மவித் தேவயாநம் என்னும் மார்க்கத்தின் வழியாகச் சென்று, விரஜா நதியை அடைந்து, அதை மாநஸிகமாகக் கடந்து, பிறகு தனது புண்ய பாபங்களை உதறுகிறான்] என்னும் வாக்யம் தென்படுகின்றது. இதிலிருந்து ப்ரஹ்ம வித்தினுடைய புண்ய பாபங்கள் தேஹ த்யாக உத்தர க்ஷணத்திலேயே விலகாமல் அர்ச்சிராதி மார்க்கத்தின் நடுவில் விலகுகின்றன என்று ஏற்படுகின்றது. இவ்வாறு இரண்டு உபநிஷத்துகளுக்கும் பரஸ்பரமுள்ள முரண்பாட்டை விசாரித்து ஸ்ரீ வ்யாஸ பகவான் தமது ப்ரஹ்ம ஸூத்ரத்தில், 'தேஹத்திலிருந்து வெளிப் புறப்படும் காலத்திலேயே ப்ரஹ்மவித்தின் புண்ய பாபங்கள் நிஶ்ஶேஷமாகப் போய்விடுகின்றன' [**सांपराये तर्तव्याभावात् तथाह्यन्ये**] என்று ஸித்தாந்தம் செய்திருக்கிறார். அதாவது: 'ஶரீரம் போனபிறகு புண்ய பாபங்களால் அடையப்படவேண்டிய பலம் ஒன்றும் ப்ரஹ்மவித்துக்கு இல்லை. ப்ரஹ்மவித் தேஹத்தை விட்டு வெளிக்கிளம்பின உத்தர க்ஷணத்தில் ப்ரஹ்மத்தை அடைகிறான் என்று வேறு சில உபநிஷத்துக்களிலும் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. புண்ய பாபங்களின் பலத்தை

அநுபவிக்க ஸம்பாவனை இல்லையாகையால், அவை அவனை அநுவர்த்திப்பதில் எவ்வித ப்ரயோஜநமுமில்லையன்றோ?' இப்படியானால் கௌஷீதகீ வாக்யத்தின் கதி என்னவென்று கேட்கலாம். இதற்கு ஸ்ரீ பாஷ்யகாரர் ஒரு ஸமாதாநத்தை அநுக்ரஹித்திருக்கிறார். அது என்னவென்றால்: கௌஷீதகீ வாக்யத்தில் காணப்படும் 'புண்ய பாபங்களை உதறுகிறான்' என்னும் அம்ஶத்தை அதன் ஸ்தாநத்திலிருந்து எடுத்து, 'தேவயாந மார்க்கமாகச் சென்று என்பதற்கு முன் வைத்துக்கொண்டு, அதன் ப்ரகாரம் மாற்றி வாக்யத்தின் அந்வயத்தைச் செய்துகொள்ள வேண்டும்' என்பதுதான். மீமாம்ஸா ஶாஸ்த்ரத்தில் 'பாட க்ரமத்தைக் காட்டிலும் அர்த்த க்ரமம் பலீயஸ்' என்று ஒரு ந்யாயமுண்டு. அதாவது: சில கார்யங்கள் ஒரு நிர்த்திஷ்ட க்ரமத்தில் நடைபெறவேண்டுமென்று ப்ரமாணாந்தரங்களால் நிஶ்சயம் ஏற்பட்டுவிட்டால், அந்த க்ரமத்திற்கு விருத்தமாக ப்ரஸ்தாவம் காணப்படும் இடங்களில் அந்தப் பாட க்ரமத்தை அநாதரித்து அர்த்த க்ரமத்திற்கு ஒத்தபடி அந்வயம் செய்துகொள்ளலாம் என்பது அந்த ந்யாயத்தின் கருத்து. இவ்விடத்தில், கர்ம க்ஷயம் முன்னதாகவும் அர்ச்சிராதி மார்க்க கமநம் பிற்பட்டதாகவும் இருப்பதே அர்த்தக்ரமமென்று ஸ்ரீ பாஷ்யகாரர் திருவுள்ளம் பற்றியிருத்தல் வேண்டுமென்றே நாம் ஊஹித்தல் வேண்டும். ஆனால் அப்படி அர்த்த க்ரமத்தை நிஶ்சயிப்பதற்குப் போதுமான ஹேதுக்கள் இருக்கின்றனவா? நிற்க: இவ்விடத்திற் செய்யப்படும் மாறுதல் ஒரு வரம்புக்கு உட்பட்டதாகத் தெரியவில்லை. உபநிஷத் வாக்ய ஶைலியைப் பராமர்ஶித்துப் பார்ப்போம். கௌஷீதகீயில் 'தேவயாந மார்க்கத்திற் சென்று விரஜா நதியை அடைந்து, அந்த நதியைத் தாண்டி, தனது ஸுக்ருத துஷ்க்ருதங்களை உதறுகிறான்' என்று தென்படும் வாக்யத்திற்கு, 'ஸுக்ருத துஷ்க்ருதங்களை உதறுகிறான்; பிறகு தேவயாநத்திற் செல்லுகிறான்; பிறகு விரஜா நதியைத் தாண்டுகிறான்' என்று மாற்றிப் பொருள் கொள்வது வரம்புக்கு உட்பட்டதாகுமா? ஆனால், சாந்தோக்யத்தில் ஸத்வித்யா ப்ரகரணத்தில் '**तस्य तावदेव चिरं यावन्न विमोक्ष्ये अथ संपत्स्ये**' என்று வித்வான் விஷயத்தில், ஆத்மா தேஹத்திலிருந்து உத்க்ராந்தி ஆனவுடன் ப்ரஹ்ம ப்ராப்தியைச் சொல்லும் வாக்யமும், தஹரவித்யா ப்ரகரணத்தில் '**एष शरीरात्समुत्थाय परं ज्योतिरुपसंपद्य स्वेनरूपेणाभिनिष्पद्यते**' என்று தேஹத்திலிருந்து வெளிக்கிளம்பும் வித்வானுக்கு அப்பொழுதே ப்ரஹ்ம ப்ராப்தியைச் சொல்லும் வாக்யமும், ப்ரஸ்துத கௌஷீதகீ வாக்யத்தைப் பாதிக்கின்றன வாகையால், கௌஷீதகீ வாக்யத்திற்கு இம்மாதிரி ஏதாவது ஒரு கதி கல்பிக்கவேண்டியதுதான் என்று ஒரு ஸமாதாநம் சொல்லலாம். இம்மாதிரி பாதன் ஸம்பவிக்குமிடங்களில் வாக்யங்களை வேறுவிதமாக நயிப்பிப்பது உண்டு. ஆனால் இப்படித் தலைகீழாக மாற்றுவது ஸாமாந்யமன்று. இதைக்காட்டிலும் இவ்விடத்தில் பூர்வபக்ஷி சொல்வதுபோல, சில கர்மங்கள் தேஹத்திலிருந்து உத்க்ராந்தி நேரும் காலத்திலும் மற்றும் சில மார்க்க மத்யத்திலும் நழுவுகின்றன என்று சொல்லி, கௌஷீதகீ வாக்யத்தைப் பாதிக்கும் சாந்தோக்ய வாக்யங்களின் தாத்பர்யத்தைக் கொஞ்சம் மாற்றுவது உசிதமாகமாட்டாதோ? சாந்தோக்ய வாக்யத்தில் தென்படும் 'ஶரீரத்திலிருந்து உத்க்ராந்தியான பிறகு' என்னும் அம்ஶத்திற்கு 'உத்க்ராந்தியாகி மார்க்கத்தில் போய்க்கொண்டிருக்கையில்' என்று தாத்பர்யம் கொள்ளலாமன்றோ? வாக்யார்த்த நிர்ணயத்தில் ஆகாங்க்ஷா ஸாந்நித்யாதிகள்போல் யோக்யதையும் ஒரு ஹேதுவாகக் கூடுமே. ஶாஸ்த்ரஜ்ஞர்கள் இந்த ஸந்தேஹத்தைப் விளக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

* * * *

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ பெரியாழ்வார் ராமாயணம்

[ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி, பஸவங்குடி, பெங்களூர்]

[ஸம்புடம் 4, ஸஞ்சிகை 5, பக்கம் 44-ன் தொடர்ச்சி]

பிராட்டியின் விஸ்வாஸமும் வியப்பும் கூறும் தரமல்ல. அவள் மந்த ஹாஸம் உள்ளத்திலுள்ள கருணைவெள்ளத்தைப் பளிங்குபோல் எடுத்துக் காட்டியது. "அப்பா! அஞ்ஜநா நந்தநா! பரதேவதையின் வாக்யம்போல் உன் வார்த்தையில் பரம நம்பிக்கை கொண்டேன். இந்த ரஹஸ்யம் ரகுநாதன் ஒருவருக்கேயன்றி மற்றொருவருக்கும் தெரியாது. அவ்விஷயத்தை நீ அறிந்துரைத்ததினால் ஸ்ரீ ராமதூதனென்பதில் ஸ்வல்பமும் ஸந்தேஹமேயில்லை. ஆகிலும் பெருமாள் சொல்லியனுப்பிய மற்றும் சில அடையாளங்களை மொழிவாய். என் நாதனது திவ்ய சரிதங் கேட்கும் தருணத்திலாகிலும் என் துக்கத்தைச் சிறிது மறக்கிறேன்" என்றாள்.

இதைக் கேட்ட மாருதி "அன்னையே! லேசமும் க்லேசங் கொள்ள வேண்டாம். உங்கள் இருப்பிடம் தெரியாததனால் இவ்வளவு தாமதம். தங்கள் துக்கம் ஸூர்யனைக் கண்ட பனிபோல் விலகும் காலம் நெருங்கியது. இன்னுமோர் விண்ணப்பம் செவிசாய்க்க வேண்டுகிறேன்."

3. கலக்கியமா மனத்தனளாய்க் கைகேசி வரம்வேண்ட
மலக்கியமா மனத்தனனாய் மன்னவனும் மறாதொழிய
குலக்குமரா! காடுறையப் போவென்று விடைகொடுப்ப
இலக்குமணன் தன்னொடுமங் கேகியதோர் அடையாளம்.

"தாயே! தங்கள் மாமியார் கைகேயி களங்கமற்ற மனமுடையவள்; ஸ்ரீராகவனிடம் அத்யந்தம் ப்ரேமையுள்ளவள். அவ்வுத்தமியின் உள்ளத்தை எங்கேயோ ஊர்பேர் தெரியாத அஸத்து கூனி மந்தர பர்வதம் திருப்பாற்கடலைக் கலக்கியதுபோல் கலக்கினாள். அவள் கோஸல நாட்டில் பிறந்திருந்தால் ரகுநாதனுக்குக் கெடுதல் செய்ய எண்ணமாட்டாள். அவ்வஞ்சகியினால் தூண்டப்பட்ட கைகேயி, ராமன் பதினான்கு வருஷம் வநம் புகவும் பரதன் முடிசூடவும் சக்ரவர்த்தியை வரம் வேண்டினாள். அறுபதினாயிரம் ஆண்டுகள் ஸத்யம் தவறாமல் அரசாண்டுவந்த மன்னவன், தான் கொடுத்த வரத்தை மறுக்க இசையவில்லை. அதை யறிந்த கைகேயி ராமனை நோக்கி, 'நீ ரகு குலத்தில் அவதரித்தவன்; தந்தையை ஸத்யஸந்தனாக்கக் கடவாய்; பதினான்கு வருஷம் கானகம் சென்றுவா' வென விடை கொடுத்தாள். அதைக் கேட்ட தங்கள் நாதன் திருமுகத்தில் கொஞ்சமும் வருத்தம் தென்படவில்லை. சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரையை ஒத்திருந்தது அவரது முக கமலம். உடனே ஸம்மதித்தார். அவருக்கு முன்னே வநம் செல்ல ஸித்தமாயிருந்தார் இளையபெருமாள். பெருமாள் அநேக ப்ரகாரம் அவனைத் தடுத்துப் பார்த்தார். அதற்கு லக்ஷ்மணன் '**कुरुष्व मामनुचरं वैधर्म्यं नेह विद्यते**' 'என்னை அடிமையாகச் செய்து கொள்ள வேண்டும். தடுத்துரைப்பதில் பயனில்லை.' என்று வேண்டினார்.

"स भ्रातुश्चरणौ गाढं निपीड्य रघुनन्दनः।
सीतामुवाचातियशा राघवं च महाव्रतम्॥"

இவ்விதம் புருஷகாரமாய்த் தங்களைச் சரணாகதி செய்து ஸ்வாமி ஸம்மதி பெற்றுத் தங்கள் இருவரையும் பின்தொடர்ந்தார்.

“अहमस्यावरो भ्राता गुणैर्दास्यमुपागतः” ‘பெருமாள் என்னைத் தம்பி என்று நினைத்திருக்கிறார்; நான் அவரது கல்யாண குணங்களுக்குத் தோற்றுத் தாஸனானேன்’ என்று விண்ணப்பம் செய்யும் இளைய பெருமாள், தங்களிருவருக்கும் ஸர்வ காலத்திலும் ஸர்வ தேசத்திலும் ஸர்வவித கைங்கர்யங்களும் செய்து கைங்கர்ய லக்ஷ்மியை அடைந்தார். இதுவும் ஸ்வாமி உரைத்த ரஹஸ்ய அடையாளங்களுள் ஒன்று என்று சொல்லிப் பணிந்தார்.

இதைச் செவியுற்ற தேவியின் திருமுகம் மேகத்தால் மறைக்கப்பட்ட சந்த்ரன்போல் இருள் சூழ்ந்தது. ‘இத்தகைய பரம பாகவதன்மேல் அடாப் பழி சுமத்தினேனே! அதன் பயன் வீண் போகுமோ? அவ்வினையின் பயனையே இப்பொழுது அநுபவிக்கிறேன்’ என்றெண்ணினாள். கண்ணீர் கண்டத்தை அடைத்ததினால் அவள் பேச முடியாதவளானாள். இதையறிந்த மாருதி “தாயே! ஸமாதானமடையுங்கள்; அனைத்தும் பகவத் ஸங்கல்பத்தால் நடந்தேறியது. அவனன்றி ஓரணுவும் அசையாதன்றோ? பெருமாள் சொல்லியனுப்பிய மற்றொரு விண்ணப்பம் கேட்டருள வேண்டும்.

4. வாரணிந்த முலைமடவாய் வைதேவீ விண்ணப்பம்
தேரணிந்த வயோத்தியர்கோன் பெருந்தேவீ கேட்டருளாய்
கூரணிந்த வேல்வலவன் குகனோடும் கங்கைதன்னில்
சீரணிந்த தோழமை கொண்டதுமோர் அடையாளம்.

“பெருமாளைப் பிரிந்த துக்கத்தினாலும் உபவாஸத்தினாலும் வாடி வருந்தும் விதேஹ ராஜ குமாரியே! ஜநக குலத்தில் அவதரித்த தேவரீரும் தந்தையைப்போல் சீர தண்டனை செய்ய அஞ்சவில்லை. அநேகம் தேர்களால் அலங்கரிக்கப்பட்ட அயோத்திக் கரசனாகிய ஸ்ரீ ராகவனுக்கு வயதிலும் ஸ்வபாவத்திலும் குணத்திலும் ஆசாரத்திலும் குலத்திலும் ரூபத்திலும் தக்க நாயகியாகிய தாங்கள் இவ்வித துக்கம் அநுபவிக்க நேர்ந்தது தெய்வச்செயல். இதன் விமோசந காலமும் நெருங்கியது. அறவே கவலையை ஒழியுங்கள். பெருமாள் சொல்லியனுப்பிய மற்றும் சில வ்ருத்தாந்தங்களையும் சொல்லுகிறேன். கேட்கக் கடவீர். பிறகு நீங்கள் மூவரும் கங்காதீரம் அடைந்தீர்கள். அவ்விடம் வேடர்களுக்கு அரசனாகிய குகப்பெருமாள் வந்தார். அவர் ராகவனிடம் உயிர்த் தோழரானார். பெருமாள் அவனது வேட ஜாதியைக் கவனிக்கவில்லை. அந்தரங்க சுத்தியைக் கண்டு தன் இருகரங்களாலும் காடாலிங்கநம் செய்துகொண்டு, “भुजाभ्यां साधु पीनाभ्यां पीडयन् वाक्यमब्रवीत् ।’ [‘குகனொடும் ஐவரானோம்’] நீ எனக்கு ஐந்தாவது ஸஹோதரன் என்று அன்புடன் அருளிச்செய்தார். அவன் மிகவும் பலவான்; கூராகிய வேலாயுதம் தரித்தால் வைரிகள் பறந்து ஓடுவார்கள். பெருமாளிடம் கொண்ட பரம ஸ்நேஹத்தினால் அவருக்கு ஏதாகிலும் அபாயம் நேரிடுமோவென்றஞ்சிக் கண் இமைக்காமல் காவல் புரிந்தான் குகன். அவனுடன் தோழமை கொண்டது பெருமாள் ஸௌசீல்ய ஸாகரன் என்னும் குணத்தை எடுத்துக் காட்டுகிறது. இத்திவ்ய குணத்திற்கு இது முதல் ஆரம்பம்; பிறகு இக்குணம் கழுகு வானரர்கள் ராக்ஷஸர்கள் முதலியவர்களிடத்தில் அநேகம் பிரிவாய்ப் பாய்ந்தோடியது. இதுவும் ரகுநாதன் கூறிய ரஹஸ்ய அடையாளங்களுள் ஒன்று.

பெருமாள் திவ்ய குணங்களைக் கேட்ட பிராட்டி அதிக ஸந்தோஷத்தினால் உண்டான மயிர்க் கூச்சலுடன் புருஷோத்தமனை த்யானம் செய்தாள். சற்று நேரங் கழித்து, “ஆம்; பகவான் உலகங்களைக் காப்பாற்றும்

பொருட்டே திவ்யாவதாரங்கள் எடுக்கிறார். அப்பொழுதன்றோ அவருடைய வாத்ஸல்யம் காருண்யம் ஸௌசீல்யம் ஔதார்யம் முதலிய குணங்கள் ப்ரகாசத்துடன் நன்கு விளங்கும். அவர் கருணை வெள்ளம் பள்ளம் மேடு இரண்டையும் ஸமனாகச் செய்யும் வல்லமை வாய்ந்தது. தெவிட்டாக் கனியாகிய என் நாதனது திவ்ய சரித்ரத்தை மேன் மேலும் உரைப்பாய்'' என்றாள். திருவடியின் ஆநந்தத்திற்குக் கரையே காணவில்லை. அவர் பக்தி பரவசமாய்க் கைகளைக் கூப்பிக்கொண்டு விண்ணப்பம் செய்தார்.

5. மானமரு மென்னோக்கி வைதேவீ விண்ணப்பம்
கானமருங் கல்லதர்போய்க் காடுறைந்த காலத்து
தேனமரும் பொழில்சாரல் சித்திரகூ டத்திருப்ப
பான்மொழியாய் பரதநம்பி பணிந்ததுமோர் அடையாளம்.

"அரக்கிகள் நடுவில் மான்போல் மருண்டு இங்கு மங்கும் நோக்கும் வைதேஹியே! இவ்வடையாளம் பரம பாகவத சரித்ரத்தைக் குறிக்கிறது. க்ருபை கூர்ந்து கவனிக்க வேண்டுகிறேன். தாங்கள் மூவரும் அடர்ந்த வனத்தில் கல்லும் முள்ளும் நிறைந்த மார்க்கத்தில் செந்தாமரையை ஒத்த திருவடிகள் நோக நடந்து, நேர்த்தியாகிய சித்ரகூட பர்வதம் போய்ச் சேர்ந்தீர்கள். அப்பர்வதத்தின் ஸௌந்தர்யம் வர்ணித்துக் கூறும் தரமல்ல. சுற்றிலும் தளிர்கள் நிறைந்த மரங்கள். பழுத்துக் குலுங்கும் மதுரமாகிய பழங்கள். மலர்ந்து தேன் சொரியும் மலர்கள். மணங் கமழும் தென்றல். பெருகி வரும் மலையருவிகள். அழகிய மணல் குன்றுகளுடன் விளங்கும் மந்தாகினி. இத்தகைய ரமணீயமான ப்ரதேசத்தில் இளைய பெருமாள் அத்யாஸ்சர்யமாய்ப் பர்ணசாலை அமைத்தார். அவ்விடத்தில் நீங்கள் இருவரும் ஸுகமாய் வஸித்தீர்கள்.

நிற்க: பரதாழ்வான் தன் தாய் கொடுத்த ராஜ்யத்தைத் துரும்பாய்த் திரஸ்கரித்துப் பரிவாரங்கள் புடைசூழ எழுந்தருளினார். பெருமாளது திருவடித் தாமரைகளில் சரணாகதி செய்தார்.

"जटिलं चीरवसनं प्राञ्जलिं पतितं भुवि ।
ददर्श रामो दुर्दर्शं युगान्ते भास्करं यथा ॥"

கிரீடம் தரிக்கும் தலையில் ஜடையும், பட்டாடை அணியும் இடையில் மரவுரியும் தரித்துப் பஞ்சணை மெத்தையில் படுக்கத் தகுந்த ஸுகுமாரன், கூப்பிய கையனாய்க் கட்டாந் தரையில் வீழ்ந்து, ப்ரளய கால ஸூர்யனைப் போல் ப்ரகாசிக்கும் பரத நம்பியைப் பகவான் பார்த்தார். எடுத்து மடிமேல் வைத்து அணைத்து ஸமாதாநம் செய்தார். பரதாழ்வான் ஸ்ரீ ராகவனை ராஜ்யத்தை ஸ்வீகரிக்கவேணுமென்று பலவாறு வேண்டினார்.

"एभिश्च सचिवैस्सार्धं शिरसा याचितो मया ।
भ्रातुः शिष्यस्य दासस्य प्रसादं कर्तुमर्हसि ॥"

"இம்மந்த்ரிமார்களுடன் தலையால் வணங்கி ஶரணாகதி செய்து ப்ரார்த்திக்கிறேன். நான் தேவரீருக்கு ஸஹோதரன் மட்டுமன்று. சிஷ்யனாகவும் தாஸனாகவுமிருக்கிறேன். என்னிடம் கருணை செய்ய வேண்டுகிறேன். என் கண் சற்றுக் கலங்கினால் பொறுக்காத தாங்கள் இவ்வளவு ஜனங்களின் கண்ணீரைக் கண்டும் திருவுள்ள மிரங்காம லிருப்பது தகுதியோ?'' என்று கதறினார்.

பித்ருவாக்ய பரிபாலநம் என்னும் ஸத்ய பாசத்தால் கட்டுண்ட பகவான் பதினான்கு வருஷங்களுக்கு முன் பட்டாபிஷேகம் செய்துகொள்ள இணங்க

வில்லே. பரதாழ்வான் செய்த ப்ரபத்திக்குப் பலனுகத் தன் திவ்ய பாதுகைகளே அளித்து ஸமாதானம் செய்தார். 'தந்தையின் வாக்ய பரிபாலநம் என்பது, தான் வநவாஸம் செய்வது மட்டும் போதாது; பரதன் முடி சூடினுல் அன்றே அது பூர்ணமாகும்' என்றெண்ணி, தன் ஸ்வர்ண பாதுகைகளேக் கிரீடமாக அளித்து ராஜ்ய மாளும்படி கட்டளேயிட்டார். பரத நம்பியும் பெருமாள் ஆஜ்ஞைக்குக் கீழ்ப்படிந்து பாதுகைகளே மகுடமாய் அணிந்தார். அப்பாதுகைகளும் ராகவன் சொற்படி நடந்தன. கீழ்ப்படிதல் என்னும் ஒரே குணத்தையுடைய இருவரும் நண்பர்களானுர்கள். மஹா பராக்ரமசாலிகளான ஸூர்ய வம்சத்து அரசர்கள் அரசாண்ட ராஜ்யத்தின் யோக க்ஷேமத்தைத் தன் திவ்ய பாதுகைகளேக் கொண்டு ஆளும் வண்ணம் செய்தார். ஆகையினு லன்றே இப்பொழுது மூன்று லோகங்களேயும் நடுக்கமுறச் செய்யும் ராவணுதிகள் ஸம்ஹாரம் நடக்கப்போகிறது. இவ்ருத்தாந்தமும் பகவான் உரைத்த ரஹஸ்ய அடையாளங்களுள் ஒன்று. இந்தீவர தளம் போன்ற தேவியின் கண்கள் மலர்ந்தன. பட்ட மரம் தளிர்ப்பது போல் அவள் நம்பிக்கை தளிர்க்கத் தொடங்கியது. "அப்பா! ஹநுமானே! நீ எம்பெருமானிடம் வைத்திருக்கும் பக்திக் கடலுக்குக் கரையேயில்லே. உன் ஸாமர்த்யமும் சாதுர்யமும் வாய்ந்த பேச்சுக்கள் என்னுள்ளத்தைக் கொள்ளே கொண்டன. மேன்மேலும் நீ பாடும் ராமசரிதங்களேக் கேட்க என் இதயம் விரும்புகிறது. மற்றெரு வ்ருத்தாந்தம் சொல்லுவாய்" என்ருர்.

தேனிலும் இனிய அன்னேயின் வார்த்தைகளேக் கேட்ட ஆஞ்ஜநேயன் அதிக விநயத்துடன், "தாயே! இப்பொழுது கூறப்போகும் சரித்ரமும் சரணுகத ரக்ஷணத்தில் முதன்மை பெற்றது. என்னப்பன் கருணே வேகத்திற்குத் தட்டுத் தடங்கல் கிடையாது. அஞ்ஜலிக்கு விஞ்சிய அஸ்த்ரமும் கிடையாது" என்பதை எடுத்துக் காட்டுகிறது. [தொடரும்]

ஸ்ரீ

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ கீதாம்ருத வர்ஷிணீ

[சிலுக்கூர் ஸ்ரீ. உப. மா. வேங்கடராகவாசார்யர், சிரோமணி]
[ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ கார்யம், ஹைதராபாத், கத்வால் ஸம்ஸ்தாந தர்மாதிகாரி]

[ஸம்புடம் 4, ஸஞ்சிகை 3, பக்கம் 21-ன் தொடர்ச்சி]

கீதா ஶாஸ்த்ராரம்பத்தில் ஆதி சேஷாவதாரமான பகவான் பாஷ்யகாரர் 'யத்பதாம்போருஹ' என்கிற ஶ்லோகத்தால் தமக்குப் பரமாசார்யனை ஆளவந்தாரை நமஸ்கரிக்கிறுர். பாஷ்யகாரர் தமக்கு ஆசார்யர்களான ஐவரையும் விட்டுப் பரமாசார்யனேத் துதிப்பது எங்ஙனம் கூடும் என்னலாம். பரமாசார்ய வந்தநமானது ஆசார்யருக்கு உகப்பானதே. 'தேவவதாசார்யமுபாஸீத' [பகவானே உபாஸநம் செய்வதுபோல் ஆசார்யனேயும் உபாஸநம் செய்ய வேண்டும்] என்று ப்ரமாணம் சொல்லியபடி, ப்ராசார்யனுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தை த்யாநம் செய்கிறுர். ஆசார்யனிடம் அநவரத பக்தி செய்தால் அவருடைய கடாக்ஷத்தால், ஆசார்யனுல் உபதேசிக்கப்படாத அர்த்த விசேஷங்கள் புலப்படும் என்கிற 'தஸ்யைதே

॥ श्रीः ॥

॥ पञ्चमः प्रश्नः ॥

हरिः ओम् । अथ हैनं शैब्यस्सत्यकामः पप्रच्छ । "स यो ह वै तद्भगवन् मनुष्येषु प्रायणान्तमोङ्कारमभिध्यायीत कतमं वाव स तेन लोकं जयति ?" इति॥

तस्मै स होवाच । एतद्वै सत्यकाम परञ्चापरञ्च ब्रह्म यदोङ्कारः । तस्माद्विद्वानेतेनैवायतनेन एकतरमन्वेति ॥ २ ॥

ஸ்ரீ:

ஐந்தாவது ப்ரஶ்நம்

இந்த ப்ரஶ்நத்தில் ப்ரணவ வித்யை என்று வ்யவஹரிக்கப்படும் ஒரு ப்ரஹ்ம வித்யை ப்ரஸ்தாவிக்கப்படுகின்றது. பகவானை அடைய வேண்டுமென்னும் இச்சையுண்டாகி, அந்த இச்சையைப் பூர்த்தி செய்து கொள்ள ஒருவன் அபேக்ஷித்தால், அதற்கு ஸாதநங்களாக ப்ரஹ்ம வித்யைகளென்று வேதாந்த ஶாஸ்த்ரத்தில் பல உபாஸநங்கள் விதிக்கப் பட்டிருக்கின்றன. இந்த உபாஸநங்கள் பலவாக இருந்தாலும், எல்லா வற்றுக்கும் ப்ரஹ்ம ப்ராப்தியே பலமாக இருப்பதால், அவைகளுள் ஏதாவது ஒன்றை ஒருவன் அநுஷ்டித்தால் மோக்ஷத்தைப் பெறுவதற்கு அதுவே போதுமென்று ஶாஸ்த்ரம் சொல்லுகின்றது. இந்த ப்ரஹ்ம வித்யைகளை விதிக்கும் உபநிஷத்துக்களே, வேறு சில க்ஷுத்ர வித்யை களையும் உபதேஶிக்கின்றன. அவைகளைக் காம்ய வித்யையென்று சொல்வார்கள். ஐஹிக போகங்களை அநுபவிக்க விருப்பமுள்ளவர்களுக்கு அவை உபகாரங்களாக இருக்கும். சிற்சில விடங்களில் அந்தக் காம்ய வித்யைகள் ப்ரதிபந்தகங்களையும் போக்கி ப்ரஹ்ம வித்யைக்கு உபகார மாகவும் இருக்கும். ப்ரணவத்தை ஹ்ரஸ்வமாக ஒரு மாத்ரையுடனாவது, தீர்க்கமாக இரண்டு மாத்ரைகளுடனாவது, இன்னும் தீர்க்கமாக மூன்று மாத்ரைகளுடனாவது எப்பொழுதும் உச்சரித்துக்கொண்டு ப்ரஹ்மத்தை உபாஸிப்பது உண்டு. இவைகளுள் மூன்றாவது உபாஸநம் ப்ரஹ்ம ப்ராப்திக்குக் காரணமாகும்; மற்றை இரண்டும், ஒன்று மநுஷ்ய லோகத் தில் பெருமையையும், மற்றொன்று தேவலோகத்தில் பெருமையையும் கொடுக்கும். இந்த விஷயமே இந்த ப்ரஶ்நத்தில் விவரிக்கப்படுகின்றது.

1. [ப - ரை] **अथ**-பிறகு, **शैब्यस्सत्यकामः** - ஶிபியின் குமாரராகிய ஸத்ய காமன் என்பவர், **एनम्** - இவரை [பிப்பலாதரை], **पप्रच्छ** - கேட் டார். "**मनुष्येषु** - மநுஷ்யர்களுக்குள், **स यः**- எவனொருவன் [**सः** என் பது அதிகாரி ஸாமாந்யத்தைக் குறிக்கின்றது], **हे भगवन्** - ஹே பூஜ்யரே! **प्रायणान्तम्** - உயிர் போகும் பர்யந்தம், **तत् ओङ्कारम्** - ப்ரணவத்தை **अभिध्यायति** - உபாஸிக்கிறானோ, **सः** - அவன், **तेन** - அந்த ஓங்காரத்தி னால், **कतमं लोकम्** - எந்த லோகத்தை, **जयति** - ஜயிக்கிறான்" **इति** என்று.

---

2. [ப - ரை.] **सः** - அந்தப் பிப்பலாதர், **तस्मै** - அந்த ஸத்யகாம

स यद्येकमात्रमभिध्यायीत स तेनैव संवेदितस्तूर्णमेव जगत्यामभिसंपद्यते। तमृचो मनुष्यलोकमुपनयन्ते। स तत्र तपसा ब्रह्मचर्येण श्रद्धया संपन्नो महिमानमनुभवति ॥

अथ यदि द्विमात्रेण मनसि संपद्यते सोऽन्तरिक्षं यजुर्भिरुन्नीयते। स सोमलोकः। स सोमलोके विभूतिमनुभूय पुनरावर्तते ॥

னுக்கு, **उवाच** - பதில் சொன்னார். "**हे सत्यकाम** - ஹே ஸத்யகாமனே! **ओङ्कार इति यत्** - ஓங்காரமென்று யாதொன்று।உண்டோ, **एतद्वै परञ्च अपरञ्च ब्रह्म** - அதுவே உயர்ந்த ப்ரஹ்மம், அதுவே தாழ்ந்த ப்ரஹ்மம். [உயர்ந்த ப்ரஹ்மம் என்பதால் பரம புருஷார்த்தமாகிற பரமாத்மாவும், தாழ்ந்த ப்ரஹ்மம் என்பதால் க்ஷுத்ர புருஷார்த்தமாகிற ஜீவனும் சொல்லப்படுகின்றன. ஓங்காரமே இந்த ஆத்மாக்கள் என்று எப்படிச் சொல்லக்கூடும் என்றால், ஓங்காரம் வாசகமாகவும் ஆத்மாக்கள் அந்த வாசகத்தால் குறிக்கப்படும் வாச்யங்களாகவும் இருக்கிறபடியால், அந்த வாச்ய வாசக ஸம்பந்தத்தைக் கொண்டு 'அதுவே இது' என்று ஸாமாநாதிகரண்யம் பேசப்படுகின்றது. ஶரீர ஶரீரி ஸம்பந்தத்தைக்கொண்டும் கார்ய காரண ஸம்பந்தத்தைச்கொண்டும் ஸாமாநாதிகரண்யம் சொல்வது போல வாச்ய வாசக ஸம்பந்தத்தைத்கொண்டும் ஸாமாநாதிகரண்யம் சொல்லக்கூடும்.] **तस्मात्** - ஆகையால், **विद्वान्** - உபாஸிக்கிறவன், **अनेनैव आयतनेन** - இந்த த்யாநத்தின் பலமாகவே, **एकतरम्** - பரப்ரஹ்மம் அபரப்ரஹ்மம், இவைகளுள் ஒன்றை, **अन्वेति** - அடைகிறான். [தாத்பர்யமென்னவென்றால், ஓங்காரத்தை உச்சரிப்பது மூன்று விதமாகும்; ஒரு விதமாக உச்சரித்து உபாஸித்தால் பரமாத்மாவாகிற பரம புருஷார்த்தத்தையும், மற்ற இரண்டு விதமாக உபாஸித்தால் அபரப்ரஹ்மத்தையும் [அதாவது: க்ஷுத்ர புருஷார்த்தங்களையும்] அடைகிறான் என்பதுதான்.

---

3. [ப - ரை.] **सः** - அந்த உபாஸகன், **एकमात्र अभिध्यायीत यदि** - ஹ்ரஸ்வமான ஒரு மாத்ரையுடைய ப்ரணவத்திற்கு வாச்யமாயிருக்கும் அபரப்ரஹமத்தை உபாஸித்தால், **सः** - அவன், **तेनैव** - அந்த அபர ப்ரஹ்மத்யாநத்தின் பலமாக, **संवेदितः**-ஸத்தை பெற்று, **तूर्णमेव** - ஶீக்ரத்திலேயே, **जगत्यां** - இந்தப் பூமியில், **अभिसंपद्यते** - ஶ்ரேஷ்டனாக ஆகிறான். **तम्** - அவனை, **ऋचः** - ருக் மந்த்ரங்கள், **मनुष्यलोकम्** - மநுஷ்ய லோகத்திற்கு, **उपनयन्ते** - ப்ராபிக்கின்றன; **सः** - அவன், **तत्र** - அந்த மநுஷ்ய லோகத்தில், **:तपसा** - தபஸ்ஸினாலும், **ब्रह्मचर्येण** - ப்ரஹ்மசர்யத்தாலும், **श्रद्धया** - ஆஸ்திக்ய புத்தியாலும், **संपन्नः** - நிறைந்தவனாய், **महिमानम्** - பெருமையை, **अनुभवति** - அடைகிறான்.

---

4. [ப - ரை.] **अथ यदि द्विमात्रेण मनसि संपद्यते** - அந்த ப்ரணவத்தையே இரண்டு மாத்ரையுடன் உச்சரித்துக்கொண்டு அந்த அபர ப்ரஹ்

यः पुनरेतं त्रिमात्रेणैवोमित्यनेनैवाक्षरेण परं पुरुषमभिध्यायीत स तेजसि सूर्ये संपन्नो यथा पादोदरस्त्वचा विनिर्मुच्यते, एवं ह वै स पाप्मना विनिर्मुक्तः स सामभिरुन्नीयते ब्रह्मलोकम्। स एतस्माज्जीवघनात् परात्परं पुरिशयं पुरुषमीक्षते। तदेतौ श्लोकौ भवतः ॥ ५ ॥

तिस्रो मात्रा मृत्युमन्त्यः प्रयुक्ताः अन्योन्यसक्ता अनविप्रयुक्ताः।
क्रियासु बाह्यान्तरमध्यमासु सम्यक्प्रयुक्तासु न कम्पते ज्ञः ॥ ६ ॥

மத்தை த்யாநம் செய்யும்பக்ஷத்தில், **सः** - அவன், **यजुर्भिः** - யஜுர் மந்த்ரங்களால், **अन्तरिक्षमुन्नीयते** - ஆகாஶத்திற்குக் கொண்டுபோகப்படுகிறான். [அதாவது: த்யு லோகத்தை ஆஶ்ரயித்திருக்கும் ஸோம லோகமென்னும் லோகத்தை அடைகிறான்]. **सः** - அவன், **सोमलोके** - அந்த ஸோம லோகத்தில், **विभूतिम्** - ஐஶ்வர்யத்தை, **अनुभूय** - அநுபவித்துவிட்டு, **पुनरावर्तते** - மறுபடியும் [மநுஷ்ய லோகத்திற்குத்] திரும்பி வருகிறான்.

---

5. [ப - ரை.] **यः पुनः** - எவனொருவன், **त्रिमात्रेण** - மூன்று மாத்ரைகளுடன், **'ओम्' इत्यनेनैवाक्षरेण** - 'ஓம்' என்னும் அந்த அக்ஷரத்தைக் கொண்டே, **परं पुरुषमभिध्यायीत** - பரமாத்மாவையே இடைவிடாமல் த்யாநம் செய்கிறானோ, **सः** - அவன், **तेजसि सूर्ये संपन्नः** - தேஜோ மண்டலமாகிற ஸூர்யனுடன் சேர்ந்து, **यथा** - எப்படி, **पादोदरः** - ஸர்ப்பமானது, **त्वचा विनिर्मुच्यते** - பழைய சட்டையிலிருந்து விடப்படுகின்றதோ, **एवम्** - அவ்விதமே, **सः** - அவன், **पाप्मना विनिर्मुक्तः** - பாபத்திலிருந்து விடப்பட்டவனாய், **सामभिः** - ஸாம மந்த்ரங்களால், **ब्रह्मलोकम्** - பகவல்லோகத்திற்கு, **उन्नीयते** - கொண்டு போகப்படுகிறான். **सः** - அவன், **एतस्मात्** - இந்த, **जीवघनात्** - ஸம்ஸார மண்டலத்தைக் காட்டிலும் [அதாவது: இந்த ஸம்ஸார தசையைக் காட்டிலும், இந்த ஶப்தம் கர்ம நிமித்த தேஹிகளைக் குறிக்கும். ஆகையால் இவ்விடத்தில் ஸம்ஸார மண்டலம் என்னும் அர்த்தத்தில் எடுத்துக்கொள்ளப்படுகின்றது] **परात्**-உத்க்ருஷ்டமான [ஶுத்தாத்ம ஸ்வரூபம் யாதொன்று உண்டோ அதைக்காட்டிலும்] **परम्** - உத்க்ருஷ்டமான, **पुरिशयम्** - எல்லா ப்ராணிகளிலும் அந்தராத்மாவாக ஶயநித்துக்கொண்டிருக்கும், **पुरुषम्** - புருஷஶப்த வாச்யனான பகவானை, **ईक्षते** - பார்க்கிறான். **तत्** - அதைப்பற்றி [அந்த ஓங்காரத்தைப்பற்றி] **श्लोकौ भवतः** - இரண்டு ஶ்லோகங்கள் இருக்கின்றன.

---

6. [ப - ரை.] **अत्यन्तसक्ताः** - அத்யந்தம் த்வரிதமான உச்சாரணத்தால் ஒரு அக்ஷரத்துடன் மற்றொன்று சேர்ந்தும், **अनविप्रयुक्ताः** - அத்யந்தம் விளம்பித்து உச்சரிப்பதால் ஒரு அக்ஷரம் மற்றொன்றுடன் மிகவும் பிரிந்து நின்றும், **प्रयुक्ताः** - உச்சரிக்கப்படும், **तिस्रो मात्राः** - மூன்று

ऋग्भिरेवं यजुर्भिरन्तरिक्षं स सामभिर्यत्तत्कवयो वेदयन्ते ।
तमोङ्कारेणैवायतनेनान्वेति विद्वान् यत्तच्छान्तमजरममृतमभयं परञ्चेति ॥ ७ ॥

इति पञ्चमः प्रश्नः ॥

மாத்ரைகள் [மூன்று மாத்ரைகளுடன் உச்சரிக்கப்படும் மந்த்ரம்], **मृत्युमन्त्यः** - அநர்த்தாவஹங்கள். **बाह्याभ्यन्तरमध्यमासु क्रियासु** - பாஹ்யங்களான யஜ்ஞம் முதலிய க்ரியைகள், ஆந்தரங்களான மாநஸிக வ்யாபாரங்கள், நடுத்தரமான வாசக ஜபங்கள், இவைகள், **सम्यक्प्रयुक्तासु [सतीषु]**- அத்யந்த ஸம்யோகம் அத்யந்த வியோகமின்றிக்கே ப்ரயோகம் செய்யப்பட்டால், **ज्ञः** - அதன் யோகத்தை அறிந்த உபாஸகன், **न कम्पते** - பலத்திலிருந்து நழுவுகிறுனில்லை.

---

7. [ப - ரை.] **स विद्वान्** - அந்த உபாஸகன், **ऋग्भिः** - ருக் மந்த்ரங்களால், **एतम्**- இந்த லோகத்தையும், **यजुर्भिः**- யஜுர் மந்த்ரங்களால், **अन्तरिक्षम्**-த்யு லோகத்தையும், **सामभिः** - ஸாம மந்த்ரங்களால் **यत्तत्कवयो वेदयन्ते** - ஸூரிகளால் எப்பொழுதும் பார்க்கப்பட்டுக்கொண்டிருக்கும் பகவல்லோகத்தையும், **तम्** - இந்த ஸ்தாநத்தையெல்லாம், **ओङ्कारेणैव आयतनेन** - ஓங்கார மார்க்கத்தாலேயே, **अन्वेति** - போகிறுன். **शान्तम्** - ஆறு விதங்களான காலுஷ்யங்களால் விடப்பட்டதாயும், **अजरम् अमृतम्** - ஜரா மரண ஶூந்யமாயும், **अभयम्** - எவ்வித பயத்திற்கும் ஆஸ்பதமற்றதாயும், **परम्** - ஸர்வோத்க்ருஷ்டமான [ப்ரஹ்மத்தை], **प्राप्नोति** - அடைகிறுன்.

இந்த ப்ரஶ்ந வாக்யங்கள் ஸ்ரீ பாஷ்யத்தில் ஈக்ஷதி கர்மாதிகரணத்தில் உதாஹரிக்கப்பட்டு இவைகளின் அர்த்தமும் அவ்விடத்தில் விவரிக்கப்பட்டிருக்கின்றது. 'இந்த உபநிஷத்தில் நிர்த்தேஶிக்கப்பட்டிருக்கும் பரமபுருஷன் பரமாத்மாவன்று; சதுர்முக ப்ரஹ்மாவே இந்தப் பரமபுருஷ ஶப்தத்தால் நிர்த்தேஶிக்கப்படுகிறுன்' என்பது இங்கு சொல்லப்படும் பூர்வபக்ஷம். பூர்வ பக்ஷிகள் சொல்லும் ஹேதுக்களாவன: (1) மநுஷ்ய லோகம் அந்தரிக்ஷ லோகம் ப்ரஹ்ம லோகம் என்று இருக்கும் க்ரமத்தைப் பார்க்கும் பொழுது, மநுஷ்ய லோகத்திற்கு அடுத்திருக்கும் அந்தரிக்ஷலோகம் ப்ரஸ்தாவிக்கப்பட்டிருப்பது போல, அந்தரிக்ஷ லோகத்திற்கு அடுத்திருக்கும் ஒரு லோகமே அதற்கு மேல்பட்டிருப்பதாகச் சொல்லப்பட வேண்டும். சதுர்முக ப்ரஹ்மாவின் லோகமே அந்தரிக்ஷத்திற்கு அடுத்து இருக்கிறபடியால், இவ்விடத்தில் சொல்லப்பட்டிருக்கும் ப்ரஹ்மலோக ஶப்தம் அந்தச் சதுர்முக ப்ரஹ்ம லோகத்தையே நிர்த்தேஶிக்க வேண்டும். இது அவர்களாற் சொல்லப்படும் முதல் ஆக்ஷேபம்.

தே³வதாதா⁴ஸ்யபூர்ண: ஸகாமம் தே' என்கிற ஶாஸ்த்ரார்த்தம் இங்கு அநுஸந்தேயம். த்ரோணாசார்யரை ஏகலவ்யன் ஒரு தடவை நமஸ்கரித்து, அவரை ப்ரதிமையாகச் செய்து வைத்துக்கொண்டு, அவரிடம் மிகுந்த பக்தியைச் செய்து, அதன் மூலமாக ஸர்வ தநுர்வேதத்தையும் கற்றதுபோல், தாம் ஆளவந்தாரை ஒரு தடவை தர்சித்தபோதே தம்முடைய கல்மஷங்கள் தொலைந்து விட்டன வென்றும், அவருடைய அநவரத த்யாநத்தால் அசேஷமான பாபங்களும் நீங்கிவிட்டன வென்றும் சொல்லுகிறார். இங்கு 'ஸமஸ்த கல்மஷங்கள்' என்பதற்கு, 'ராமாநுஜ தாஸர்களான நம்முடைய பாபங்களும் அப்பொழுதே நீங்கிவிட்டன' என்றும் தாத்பர்யம் கூறலாம்.

பகவானான கண்ணபிரான் தான் அவாப்த ஸமஸ்த காமனாயினும், 'லோகவத்து லீலாகைவல்யம், ஹரே விஹார க்ரீடாகந்து³கேஷ்விவ ஜந்தூந்:' என்கிற ப்ரமாணங்களை அநுஸரித்து ஜகத் வ்யாபாரத்தை லீலையாகப் பாவித்து, ஸமஸ்த ஹேயகுண ரஹிதனாய் ஸமஸ்த கல்யாணகுண பரிபூர்ணனாய் 'பரித்ராணாய ஸாதூ⁴நாம்' என்றபடி ஸாதுக்களை ரக்ஷிப்பதற்காக அவதரித்து ஆநுஷங்கிகமாக துஷ்டநிரஸநம் செய்து, தானே பரதேவதை என்றும் ஜகத்காரணன் என்றும் ஸர்வகர்ம ஸமாராத்யனென்றும் மோக்ஷப்ரதனென்றும் வேத வேதாந்த வேத்யனென்றும் ஸர்வ ஜநங்களுக்கும் தெரிவிப்பதுடன், ப்ரம்ஹாதி ஸ்தம்ப பர்யந்தமாக ஜகத்தை ஸ்ருஷ்டித்துத் தான் அதில் அநுப்ரவேசித்து, அவரவரால் அந்தந்தக் கர்மாக்களால் ஆராதிக்கப்பட்டு, அவரவர் அநுகுணமாகத் தர்மார்த்த காம மோக்ஷ ரூபமான பலங்களை அளிப்பவராய், பாண்டவ கௌரவர்களுடைய யுத்தத்தை ப்ரோத்ஸாஹம் செய்யும் வ்யாஜத்தால் மோக்ஷ ஸாதகமாக வேதாந்தங்களில் சொல்லப்பட்ட கர்மயோக ஜ்ஞாநயோக ஸாத்யமான பக்தியோகத்தை அவதரிப்பித்து, அர்ஜுநனுக்குத் தத்வோபதேசம் செய்யத் தொடங்கி அதன் மூலமாக ஸர்வ ஜநங்களும் தத்வ ஹித புருஷார்த்தங்களை எளிதில் தெரிந்து கொள்ளுமாறு அர்ஜுநனை ரதியாக்கித் தான் தேர்ப்பாகனாக நின்று ரஹஸ்யார்த்தங்களை உபதேசிக்கத் தொடங்கினான். இங்கு 'அபர்யாப்தம் தத³ஸ்மாகம் ப³லம் பீ⁴ஷ்மாபி⁴ரக்ஷிதம் | பர்யாப்தம் த்விதமேதேஷாம் ப³லம் பீ⁴மாபி⁴ரக்ஷிதம்' என்கிற ஸ்லோகத்திற்கு ஸ்வாமி தேசிகன் தாத்பர்ய சந்த்ரிகையில் சில ஶங்கா ஸமாதாநங்களைச் செய்திருப்பதைப் பராமர்சிப்போம்.

இந்த ஸ்லோகம் துர்யோதநன் த்ரோணாசார்யரைப் பார்த்துக் கூறியது. இதன் பொருள் :—தத்-கீழ்ச் சொன்ன காரணத்தால், பீஷ்மாபிரக்ஷிதம்-பீஷ்மாசார்யரால் ரக்ஷிக்கப்பட்ட, அஸ்மாகம்-எங்களுடைய பலமானது, அபர்யாப்தம்-சத்ரு ஸைந்யத்தை நாசம் செய்ய வல்லமையற்றது; பீமாபிரக்ஷிதம்-பீமஸேனனால் ரக்ஷிக்கப்பட்ட, ஏதேஷாம்-இவர்களுடைய இந்தப் பலமானது, பர்யாப்தம்-(சத்ரு ஸேனையை) நாசம் செய்ய வல்லமையுடையது.

இங்கு இந்த அர்த்தம் ஸரிப்படாதென்று ஒரு சங்கை உண்டாகிறது. 'இத³ம் ப³லம்' என்கிற பதங்களுக்கு எப்படி ஸாமாநாதிகரண்யமோ அப்படியே 'தத³ஸ்மாகம்' என்கிற பதங்களுக்கும் ஸாமாநாதிகரண்யம் ஏற்படவேண்டும். 'தத்' என்கிற பதத்திற்கு 'அந்தக் காரணத்தால்' என்று அர்த்தம் சொன்னால் ஸாமாநாதிகரண்ய பங்கம் ஏற்படும். 'நநந்தயேத்' என்கிற ஸ்வபாவமுள்ள துர்யோதநன் தன்னுடைய ஸேனையை அஸமர்த்தமாகவும் சத்ரு ஸேனையை ஸமர்த்தமாகவும் நினைக்கமாட்டான். மேலும் கௌரவர்களுடைய ஸேனை பதினொரு அக்ஷௌஹிணி பரிமித மானதாலும், பாண்டவர்களுடைய ஸேனை

ஏழு அக்ஷௌஹிணி பரிமிதமானதாலும், தன்னுடைய ஸேனையை அவ்வாறு நினைக்க இடமில்லை. ஆகையால் இந்த ஶ்லோகத்திற்குத் தூராந்வயத்தை யாவது ஸஹித்துக்கொண்டு, 'எங்களுடைய பலமானது' என்று அர்த்தம் செய்யாமல் "பீமாபிரக்ஷிதமான தஸ்ஸ பலம்-அந்தப் பலமானது எங்களுக்கு அபர்யாப்தம்; அதாவது: அந்தப் பலம் எங்களை ஜயிக்கச் சக்தியற்றது. பீஷ்மாபிரக்ஷிதமான ஊஂ பலம்-இந்தப் பலமானது, ஏதேஷாம் பர்யாப்தம்-இவர்களை ஜயிப்பதற்கு ஸமர்த்தமாகிறது" என்று அர்த்தம் சொல்ல வேண்டுமென்று சிலர் சொல்லுகிறார்கள். இந்த அர்த்தம் மூல பாஷ்யாதிகளுக்கு ஸரியல்லவென்று ஸ்வாமி தேசிகனுடைய திருவுள்ளம். முதலில் துர்யோதநன் ஆசார்யனிடம் சொல்லும்போது தன்னுடைய ஸேனையைவிட சத்ருஸேனை குறைவாக இருந்தபோதிலும், அந்த ஸேனை மிகவும் பெரியதென்று 'மஹதீம் சமூம்' என்பதால் நிரூபித்தான். ஸேனாதிபதியான த்ருபத புத்ரனைப் புத்திமான் என்றும் பீமார்ஜுனர்களுக்கு ஸமமான பராக்ரமத்தையுடைய அநேக சூரர்கள் அங்கு இருக்கிறார்களென்றும் நிரூபித்தான். தன்னுடைய ஸேனையை வர்ணிக்கும்போது இப்படியெல்லாம் ஸ்தோத்ரம் செய்யாமல் 'மதர்தே த்யக்தஜீவிதா:' [எனக்காக ப்ராணனை விட்டவர்கள்] என்று சொல்லி முடித்தான். பிறகு 'தஸ்ய ஸஂஜநயந் ஹர்ஷம்' என்பதால், பிதாமஹரான குருவ்ருத்தர் துர்யோதநனுக்கு ஸந்தோஷத்தை உண்டுபண்ணுவதற்கு ஶங்கத்தை ஊதினான் என்றும் சொல்வதால், முன்பு அவனுக்கு ஶோகம் இருந்திருக்கவேண்டுமென்றே சொல்லவேண்டும். ஆகையால் துர்யோதநன் தன் ஸேனையை அஸமர்த்தமாகவும் சத்ரு ஸேனையை ஸமர்த்தமாகவும் நினைத்தது ஸரியே. இதுதான் ஸ்ரீ பாஷ்யகாரருக்கு ஸம்மதமான அர்த்தம் என்று ஸ்ரீ தேசிகன் திருவுள்ளம். 22-வது ஶ்லோகத்தில் 'யாவதேதாந்நிரீக்ஷேஹம்' என்பதால், 'யுத்தம் செய்பவர்களைப் பார்க்கிறேன்' என்று சொல்லி, 23-வது ஶ்லோகத்திலும் 'அவேக்ஷேஹம்' [யுத்தம் செய்பவர்களைப் பார்க்கிறேன்] என்று அர்ஜுனன் சொல்வது புநருக்தி ஆகாதா என்று சங்கை ஏற்படுமே என்றால் அப்படியல்ல. 'என்னுடன் யார் சண்டை செய்யப் போகிறார்களோ அவர்களைப் பார்க்கிறேன்' என்று சொல்லாமல், 'என்னுடனிருந்து பிறருடன் சண்டை செய்பவர்களைப் பார்க்கிறேன்' என்று அர்த்தமாகையால் முதல் ஶ்லோகம் தன் ஸேனையைப் பார்ப்பதற்காகச் சொன்ன வசநம்.

அப்பொழுது, 'மைகஃயா ஸஹ ஸ்ரீக்வா வஃ யோத்வ்யம்' என்று அந்வயம். 2-வது ஶ்லோகம் 'சத்ரு ஸேனையைப் பார்க்கிறேன்' என்று சொல்வதற்காக வந்தது. அரக்கு மாளிகையைத் தீக்கு இரையாக்கினது முதலான வ்யாபாரங்களால் பாண்டவர்கள் கௌரவர்களால் வஞ்சிக்கப்பட்டபோதிலும், அதனால் அவர்கள் ஆததாயிகளானபடியால், ஆததாயிகளை வதம் செய்வது தோஷமில்லையென்று தெரிந்திருந்தும், யுத்தத்திற்குச் சென்றவன் திரும்பிவருவது தர்மமல்லவென்று தெரிந்திருந்தும், அர்ஜுநன் பந்து விநாசம் ஏற்படுமென்ற ஓர் முக்யமான அபிப்ராயத்தால் தயையால் சோகித்தவனாய் யுத்தம் செய்ய முடியாதென்று சொல்லி ரதத்தின் ஸமீபத்தில் உட்கார்ந்து விட்டான்.

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

செய்திகள்

---

(1)

ஸ்ரீ கருடபுரம் ஸ்வாமி

[ஸ்ரீ. உப. தி. ஈ. சடகோபாசார்யர், திருப்பாப்புலியூர்]

[illegible] |
[illegible] ‖ 1

[illegible]
[illegible] |
[illegible]
[illegible] ‖ 2

[illegible]
[illegible] |
[illegible]
[illegible] ‖ 3

[illegible]
[illegible] |
[illegible]
[illegible] 4

[illegible] |
[illegible] ‖ 5

[illegible] |
[illegible] ‖ 6

[illegible] |
[illegible] ‖ 7

[illegible]
[illegible] |
[illegible]
[illegible] ‖ 8

[illegible]
[illegible] |
[illegible]
[illegible] ‖ 9

[illegible]
[illegible] |
[illegible]
[illegible] ‖ 10

[illegible]
[illegible]

[illegible]
[illegible] 11

[illegible]
[illegible]

[illegible]
[illegible] 12

[illegible]
[illegible]

[illegible]
[illegible] 13

[illegible]
[illegible]
[illegible]
[illegible] 14

[illegible]

[illegible]
[illegible]
[illegible] 15

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]

[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible] 19

कृतं शिवाद्रिस्थ भवत्प्रकाशात्
विद्योतमानं प्रथितप्रभावाः ।
यथा भवन्तं प्रविचार्य नीतं
वेङ्कटनाथेन हि सच्चरित्रम् ॥ 20

कर्णाकर्णस्तुषेष्टाराससेत्र्य न वयीष्टतः ।
प्रणतार्तिहरेणासौ स्थापितश्रीनिवासश्रीः ॥ 21

विदुषेष्वेष वेङ्कटेन लक्ष्मीनाथेन संमतः ।
यत्रैवं वेदान्तचार्यपुष्पवाङ्मयसायतात् ।
स्वयं प्रत्यक्षयंस्तस्यै सान्द्रं कर्णान्ते नरः ॥ 22

विपश्चिज्ज्ञा विनयाहितश्रीः
क्रमेण यत्नादवतार्यशेषु ।
ययावपायाय महीसुरेन्द्रः
निवृत्तकृत्या शिवतारारोह ॥ 23

निर्वहणयोगं गार्हं योगिरत्नं
कविकलुषविषघ्नं सत्ययोगैकनिष्ठम् ।
संविदनपायसंस्तावनु सज्जनाः
कवितयार्जवाद्या शोभते सत्वारी ॥ 24

---

(2)

'கோயில்' கவர்ந்த கவிகள்

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ஸ்ரீ. உப. ரே. திருமலை அய்யங்கார், தமிழ் வித்துவான், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.]

திருமாலின் திவ்விய தேசங்கள் நூற்றெட்டனுள் பிரதானமானதும், சோழவள நாட்டுத் திருப்பதிகள் ஐயெட்டில் முக்கியமானதும், 'கோயில், திருமலை, பெருமாள் கோயில்' என்று எடுத் தியம்பப் பெறுகின்ற முத்தலங்களுள் முதலதும், 'கோயில்' 'பெரிய கோயில்' 'பூலோக வைகுண்டம்' 'போக மண்டபம்' என்றிப்புடைகளிலே போற்றப் பெறுவதுமான திருப்பதியே 'திருவரங்கம்' என்பது. இக் 'கோயில்' என்னும் திவ்விய தலம் கவிக ளனைவரையும் கொள்ளை கொண்டது. அவர்களில் அழகிய மணவாள தாசர் திருவேங்கட நாதன் என்ற கவிச் சிரேட்டர்க ளிருவ ருள்ளத்தையுங் கவர்ந்தவாற்றைச் சற்றுக் காண்பாம்.

திருவரங்கத் தந்தாதி, திருரங்கத்து மாலை, திருவரங்கக் கலம்பகம், திருவேங்கட மாலை, திருவேங்கடத் தந்தாதி, அழகரந்தாதி, நூற்றெட்டுத் திருப்பதி யந்தாதி, சீரங்க நாயக ரூசல் என்ற எட்டு நூல்களுக்கும் அஷ்ட பிரபந்தம் என்று பெயர் வழங்கும். இவற்றைப் பாடியவர் அழகிய மணவாள தாச ரென்கிற திவ்விய கவி பிள்ளைப் பெருமாளையங்கார். சீரங்க நாயகரூசலின் ஆறைந்தாம் பாட்டு பின்வருமாறு :—

" புண்டரிகத் தவன்றவஞ்செய் திறைஞ்சுங் கோயில்
புரிசடையோன் புராணஞ்செய் தேத்துங் கோயில்
பண்டிரவி குலத்தரசர் பணிந்த கோயில்
பரிந்திலங்கைக் கோன்கொணர்ந்து பதித்த கோயில்
மண்டபமுங் கோபுரமு மதிலுஞ் செம்பொன்
மாளிகையுந் தண்டலையு மலிந்த கோயில்
அண்டர்தொழுந் திருவரங்கம் பெரிய கோயில்
அமர்ந்துறையும் பெருமாள ராடி ரூசல்."

[புண்டரிகத்தவன் - திருமாலின் நாபீ கமலத்தில் தோன்றிய பிரமதேவன்; இறைஞ்சும் - பிரதிஷ்டை பண்ணித் திருவாராதனஞ் செய்து வணங்கின; புரிசடையோன் - முறுக்கிவிட்ட முடியையுடைய சிவபிரான்; ஏத்தும் - துதித்த; இரவி குலம் - சூரிய வமிசம்; இலங்கை கோன் - இலங்கைக்கு அரசனாகிய விபீஷணாழ்வான்; பரிந்து - விரும்பி; செம்பொன் - சிவந்த பொன்; தண்டலை - சோலைகள்; மலிந்த - நிறைந்துள்ள; அண்டர் - தேவர்; அமர்ந்து உறையும் - பொருந்தி நித்தியவாசஞ் செய்கின்ற; பெருமானார் - ஸ்ரீரங்கநாதன்.]

'கோயில்' எனும் பதம் ஆறுமுறை வழங்கப் பெறுகின்றது இப் பாட்டில். ஷாட்குண்ய பரிபூர்ணனான பகவானைக் குறிக்க இங்ஙனம் அய்யங்கார் பாடினார் போலும்.

'எண்குணத்தான்' எனப் போற்றியுள்ள பெற்றி தோற்றக் 'கோயில்' எனும் பதம் எண்முறை வருமாறு யாத்துள்ளார் நந்தூப்புல் திருவேங்கடமுடையான். அப் பாசுரம் ஈதே :—

"ஆராத வருளமுதம் பொதிந்த கோயில்
அம்புயத்தோ னயோத்திமன்னற் களித்த கோயில்
தோராத தனிவீரன் றொழுத கோயில்
துணையான வீடணற்குத் துணையாங் கோயில்
சேராத பயனெல்லாஞ் சேர்க்குங் கோயில்
செழுமறையின் முதலெழுத்துச் சேர்ந்த கோயில்
தீராத வினையனைத்துந் தீர்க்குங் கோயில்
திருவரங்க மெனத்திகழுங் கோயில் தானே"

—தேசிகமாலை, அதிகார சங்கிரகம் 42.

[ஆராத - அநுபவிக்க வநுபவிக்கத் தெவிட்டாத; அருள் அமுதம் - கருணையே வடிவெடுத்த; அம்புயத்தோன் - தாமரையில் வசிக்கும் பிரமன்; அயோத்தி மன்னன் - இக்ஷ்வாகு; தோராத - அபஜய முறாத; தனி வீரன் - ஸ்ரீராமபிரான்; தொழுத - ஆராதித்த; வீடணன் - விபீஷணன்; சேர்க்கும் - அடைவிக்கும்; செழுமறை - சிலாக்கியமான வேதம்; முதல் எழுத்து - பிரணவம்; தீராத - நீங்காத; கோயில் - திவ்ய தேசம்.]

பிரணவாகார விமானத்திற் பள்ளிகொண் டெழுந்தருளியுள்ள மூல மந்த்ர ப்ரதிபாத்யனை முழு முதல்வன் பெருங் கோயிலை எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தப் பாவாற் பாடி யநுபவித்துத் தமிழர் பெற்றின்புறுமாறு தந்த தூப்புல் வள்ளல் எனுஞ் சந்தமிகு தமிழ் மறையோனுக்கு இவ்வையகம் யாது கைம்மா றியற்ற முடியும்? நாராயணயை வாழ்க! நாதன்ருள் வாழ்க!

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

பார்த்திவஞு ஆடிமீ

1உ	திங்கட்கிழமை	—	கடக ஸங்க்ரமணம்: கடக ரவி 5-38; தக்ஷிணாயந புண்ய காலம்: சூந்ய திதி.
2உ	செவ்வாய்க்கிழமை	—	கடக சுக்ல அஷ்டமி திதி.
6உ	சனிக்கிழமை	—	ஸர்வ (ஶயந) ஏகாதசி.
18உ	வியாழக்கிழமை	—	நவமி-தசமி திதி த்வயம்; பதினெட்டாம் பெருக்கு.
19உ	வெள்ளிக்கிழமை	—	ஏகாதசி திதி.
20உ	சனிக்கிழமை	—	ஸர்வ ஏகாதசி (வ்ரதம்)
23உ	செவ்வாய்க்கிழமை	—	ஸர்வ அமாவாஸ்யை.
26உ	வெள்ளிக்கிழமை	—	திருவாடிப் பூரம்: ஸ்ரீ ஆண்டாள் திருநக்ஷத்ரம்
29உ	திங்கட்கிழமை	—	கடக சுக்ல ஷஷ்டி திதி.
30உ	செவ்வாய்க்கிழமை	—	அதிதி.
31உ	புதன்கிழமை	—	கடக சுக்ல ஸப்தமி திதி.
32உ	வியாழக்கிழமை	—	சூந்ய திதி: ஸிம்ஹ ஸங்க்ரமணம்; ஸிம்ஹ ரவி 33-50.

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

योऽन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्तां सञ्जीवयत्यखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन् प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்ரீ அழகிய சிங்கரின் யாத்ரோத்ஸவம்

ஸ்ரீ அழகிய சிங்கர் சென்ற வைகாசிமீ 29உ சோளஸிம்ஹபுரத்து எம்பெருமானை மங்களாஸாஸநம் செய்துவிட்டு, அங்கிருந்து சித்தூருக்கு எழுந்தருளி, அவ்விடத்தில் அங்குள்ள பக்தர்களால் பத்துத் திநங்கள் ஆராதிக்கப்பெற்று, அவ்விடமிருந்து அஹோபிலம் எழுந்தருளப் போவதாக ஸமாசாரம் கிடைத்திருக்கிறது. ஸங்கல்பத்திற்கு ப்ராயேண அஹோபிலம் எழுந்தருளி, அங்கிருந்து உத்தரதேஸ யாத்ரையாக எழுந்தருளலாமென்று தெரிகிறது. இவ்விடத்தில் இருக்கும் நம்மைப் போன்ற அஸக்தர்களுக்கு ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய ஸேவை இரண்டொரு வர்ஷ காலத்திற்குத் துர்லபமாகவே இருக்கும்.

मा खिद्यत महाभागाः स तिष्ठत्यस्मदन्तिके ।
अन्तर्हृदि स भूतानामास्ते ज्योतिरिवैधसि ॥

*　　*　　*　　*

மஹா மஹோபாத்யாய கோடைவாசல் ஸ்ரீ. உப. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி

நமது சக்ரவர்த்தியின் பிறந்த திநக் கொண்டாட்டத்தன்று, ராஜாங்கத்தார் திருப்பதி தேவஸ்தாநம் ஆஸ்தாந வித்வான் கோடைவாசல் வித்யாரத்நாகரம் ஸ்ரீ. உப. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமிக்கு மஹாமஹோபாத்யாயப் பட்டத்தைக் கொடுத்தார்கள் என்பது ப்ராயேண எல்லாருக்கும் விதிதமாக இருக்கலாம். இது ஒரு ஸந்தோஷகரமான ஸமாசாரம். ப்ரஸஸ்தவ்யமான பொருள் ப்ரஸம்ஸிக்கப்பட்டால், அது ஒரு ஸந்தோஷத்திற்கு ஹேதுவன்றோ? மஹாமஹோபாத்யாயப் பட்டமானது ராஜாங்கத்தாரால் மஹாவித்வான்களுக்கு அவர்களுடைய வைதுஷ்ய மடியாகக் கொடுக்கப்படும் ஒரு பிருது. வித்வான்களுடைய வைதுஷ்யத்தை ஸாக்ஷாத்தாக அறிந்துகொள்வதற்கு ஸக்தியற்றிருக்கும் நமது ராஜாங்கத்தார், வித்வான்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் தமக்கு மந்த்ரி ஸ்தாநீயர்களான பெரிய அதிகாரிகளின் வார்த்தையை நம்பியே ப்ரவர்த்திக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இந்தக் காரணத்தால் பட்டம் அளிப்பதில் விளம்பம் ஏற்படவும் தவறுதல் உண்டாகவும் ஸம்பாவநை உண்டு. ப்ரக்ருத விஷயத்தில் விளம்பம் ஏற்பட்டபோதிலும், ஒருவித தவறுதலு மின்றிக்கே அந்தப் பிருதுக்கு அத்யந்தம் அநுரூபமாயும் ஸத்ருஸமாயு மிருக்கும் வ்யக்தியினிடமே அது சேர்ந்தது என்பது ஒரு விஸேஷ த்ருப்திக்கு ஹேதுவாகின்றது.

"भोक्तारमात्मसदृशं सुकृतैर्गता त्वम्"

ஸ்ரீ நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி ஒரு ப்ராசீந பண்டிதர். ஸ்ரீ குரிச்சி ஸ்வாமியென்று ஜகத் ப்ரஸித்தரான மஹா வித்வானிடம் ந்யாய ஸாஸ்த்

Regd. No. M. 4437

ரத்தை ப்ராசீந ரீதியில் அதிகரித்தவர். ப்ரஹ்மவிதக்ரேஸரராய் எழுந்தருளி யிருந்த தமது திருத்தகப்பனாரிடம் அத்யாத்ம ஶாஸ்த்ரத்தை க்ரஹித்தவர். இந்த வித்யைகளின் க்ரஹணத்திற்குப் பிறகு ஜந்மஸித்தமான தமது புத்தி யைக்கொண்டு அநேக க்ரந்தாந்தரங்களைப் பரிஶீலித்து, அவைகளிலிருந்து அறியக்கூடிய அநேக ஸூக்ஷ்மார்த்தங்களையும் உள்ளபடி அறிந்தவர். நமது தேஶத்தில் வழங்கிவரும் ஸகல தர்ஶநங்களின் ரஹஸ்யங்களும் இவருக்கு நன்றாக விதிதங்கள். இந்தத் தர்ஶநங்களைப்பற்றி அவர் உபந்யாஸம் செய்வ தைக் கேட்கும்பொழுது 'அவர் எந்தத் தர்ஶநத்தைப்பற்றிப் பேசுகிறாரோ அதைச் சேர்ந்தவர்தானோ அவர்,?' என்று ஶ்ரோதாக்களுடைய மநஸ்ஸில் தோன்றும்படியே அவர் உபந்யஸிப்பர். ஒவ்வொன்றிலும் அதில் தென் படும் குணபாகங்களை ஆமோதிக்கும் நோக்கமே அவரிடம் தலையெடுத்து நிற்குமேயன்றி, தோஷங்களைப் பார்த்து அவைகளைத் தூஷிக்கும் ஸ்வபா வம் அவரிடம் இல்லை. இது மிகவும் புகழத்தகுந்த மஹிமை. ஆனால்,

"असामर्थ्यं फलन्त्येते"

என்கிறபடி இந்தச் சிறந்த குணம் அவருக்குப் பெரியதொரு அபவாதத்திற் குக் காரணமாகியிருப்பது நமக்குத் தெரியும். அநேக ஸமயங்களில் அவர் அத்வைதத்தைப்பற்றி ப்ரஸங்கம் செய்வது உண்டு. அப்பொழுது அந்த மதத்தின் ப்ரவர்த்தகரான பகவத்பாதர்களின் பெருமையை ஶ்லாகித்துப் பேசுவார். அதன் நோக்கத்தை அறியாத அநேக ஸ்ரீ வைஷ்ணவ வித்வான் கள் அவரை அத்வைத பக்ஷபாதி என்று க்ரஹித்து அவரை ஒருதலையாகக் குறைத்துப் பேசுவதை நாம் அறிவோம். வஸ்து ஸ்திதி அப்படியன்று. அது வைதுஷ்யத்தின் சீர்மை. இப்படிப்பட்ட உத்தம குணங்கள் வாய்ந்து சிறந்த ஶாஸ்த்ர ஜ்ஞாநத்தையும் பூர்ணமாகப் பெற்றிருக்கும் இந்த வித்வான் ப்ரபுக்களால் புரஸ்கரிக்கப்படாவிட்டால்,

"बोद्धारो मत्सरग्रस्ताः प्रभवः स्मयदूषिताः ।
अबोधोपहताश्चान्ये जीर्णमङ्गे सुभाषितम् ॥

என்கிறபடி வைதுஷ்யம் அடியோடு அஸ்தமித்துவிடுமன்றோ? அப்படிப் பட்ட துர்த்தஶைக்கு இடங்கொடாமல் பெருமைப்படுத்தவேண்டிய பொரு ளைப் பெருமைப்படுத்தின ராஜாங்கத்தாருக்கும், பெருமைப்படுத்தப்பட்ட மஹானுக்கும் நமது ஹார்த்தமான அபிநந்தநத்தை நிவேதநம் செய்கின்றோம்.

Printed by K. Satakopachariar, at the Liberty Press, 10, Linghi Chetty Street. G.T., Madras
Edited & Published by S. Vasudevachariar, 5. Ramaswami Street, Tyagarayanagar, Madra